DEPOSITION OF WITNESS

( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)

***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.2 MADURANTAKAM

Calender : CC 119/2025

Miscellaneous :

Sessions : PW 2

Deposition of Witness for

**எதிரி ஆஜர்**

| | |
|---|---|
| Name | ஏழுமலை |
| Father / Husband Name | மாரிமுத்து |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of 25.09.**2025**

**முதல் விசாரணை:**

நான் தற்போது இரும்புலியில் வசித்து அரசு பேருந்தில் நடத்துனராக வடபழனியில் தங்கி பணி செய்து வருகிறேன். நான் பணியில் இருந்தபோது எனது மனைவி ரேகா எனக்கு போன் மூலம் கடந்த 22.03.2025 ம் தேதி என் மனைவி எங்கள் வீட்டில் படுத்துக்கொண்டிருந்த போது ஜன்னல் வழியே ஆஜர் எதிரி கையை நீட்டி சைகை காட்டினார் என்றும் எனது மனைவியின் கையை பிடித்து ஆபாசமாக பேசினார் என்றும் கூறினார். 24.03.2025 ம் தேதி புகார் கொடுத்தோம். மேற்கண்ட சம்பவத்தினால் எனக்கு மன உலைச்சல் ஏற்பட்டு வேலை சரியாக செய்ய முடியவில்லை. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

**எதிரி வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை செய்ய முன்வராததால் குறுக்கு விசாரணை முடித்து வைக்கப்பட்டது.**

DEPOSITION OF WITNESS

( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)

***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.2 MADURANTAKAM

Calender : CC 119/2025

Miscellaneous :

Sessions : PW 1

Deposition of Witness for

**எதிரி ஆஜர்**

| | |
|---|---|
| Name | ரேகா |
| Father / Husband Name | ஏழுமலை |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of 25.09.**2025**

**முதல் விசாரணை:**

1.) நான் தற்போது இரும்புலியில் வசித்து இல்லத்தரசியாக இருந்து வருகிறேன். எனது கணவர் அரசு பேருந்து நடத்துனராக வடபழனியில் தங்கி பணி செய்து வருகிறார். அவருக்கு விடுமுறை கிடைக்கும் நாட்களில் வீட்டிற்கு வருவார். எங்கள் வீட்டிற்கு எதிர் வீட்டில் வசிக்கும் ஆஜர் எதிரி சீனிவாசன் இரவு நேரத்தில் 7.00 மணிக்கு மேல் கையால் சைகை காட்டினார். நான் அவரிடம் அதை கண்டித்துவிட்டு வந்துவிட்டேன். மூன்று மாதங்களாக அவ்வாறே சைகை செய்து கொண்டிருந்தார். நான் என் கணவரிடம் பிரச்சனை வரும் என்று எண்ணி அதை சொல்லவில்லை. எனக்கு 2 மகன்கள் மற்றும் ஒரு மகள் உள்ளார். கடந்த 22.03.2025 ம் தேதி எனது மகள் சுற்றுலாவிற்கு சென்றிருந்தார். அவருக்காக நான் இரவு 10.00 மணிக்கு மேல் காத்துக்கொண்டிருந்து வீட்டு திண்ணையில் படுத்துக் கொண்டிருக்கும் போது திண்ணைக்கு அருகே இருந்த ஜன்னலில் துணியை விலக்கி ஆஜர் எதிரி எட்டு பார்த்ததை கண்டு உடனே கதவை திறந்து வெளியில் சென்று பார்த்தபோது ஆஜர் எதிரி என் கையை பிடித்து இழுத்து என்னிடம் தவறாக நடந்துகொள்ள முற்பட்டார். நான் மறுநாள் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். **(அந்த புகார் அசாஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

**எதிரி வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை செய்ய முன்வராததால் குறுக்கு விசாரணை முடித்து வைக்கப்பட்டது.**